1982 மார்ச் 25] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இப்படிப்பட்ட சூழ்நிலைக்கு வராமல் தடுக்கப்படக்கூடிய நிலைமை ஏற்படும். ஆதிதிராவிடர்களும் மற்றவர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பொருள் நட்டத்திற்குள்ளாகியிருக்கிறார்கள். 5, 6 பேர்கள் கைதுசெய்யப்பட்டு இருக்கிறார்கள், வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது, மேலும் புலன் விசாரணை நடைபெற்று வருகிறது. அரசாங்கம் அதன் பேரில் மேலும் நடவடிக்கை எடுத்துவருகிறது. இப்போது அங்கே அமைதி நிலவி வருகிறது என்பதை எடுத்துச் சொல்லி இது குறித்து விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டியதில்லை என்பதைத் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து அத் தீர்மானம் குறித்து விவாதிக்க தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

(4) அறிவிப்புகள்.

(அ) அமைச்சர்கள் உட்பட உறுப்பினர்கள் தங்களது சொத்துக்கள் பற்றி அறிவிப்பது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு 27—8—1969 அன்று பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு இணங்க சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், அமைச்சர்கள் தங்களது சொத்து பற்றிய விவர அறிக்கையை அதற்குரிய படிவத்தில் 31—3—1981 இல் உள்ளவாறு சட்டமன்றப் பேரவைத் துறைக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(5) கவன ஈர்ப்புகள்.

(அ) உதகமண்டலம் ''இண்ட்கோ கேரேஜ்'' நிறுவனம் மூடப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கே. கல்லன் மு. அரங்கநாதன், கே. உச்சி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு ஊரக தொழில் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.